O.S. No: 46/2017
பெயர்:திரு. திருவேங்கடம்
**பி.சா. 1**
11-06-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.21**

**5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நாராயணசாமி மடம் தாவா சொத்தில் தான் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு நாராயணசாமி மடத்தின் மூலமாக தான் செல்ல வேண்டும் என்றால் இந்த வழியும் உள்ளது . அதை தவிர வேறு வழிகளும் உள்ளன . 1958 வருடத்தில் நிறைவேற்றுகை செய்யப்பட்டதாக கூறப்படும் பதிவு செய்யப்படாத உயிலை நான் எனது தரப்பு ஆவணமாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த உயிலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யாததற்கான காரணத்தையும் நான் எனது பதிலுரையில் கூறவில்லை என்றால் சரிதான் . அது தேவையில்லை என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை . எனது பதிலுரையில் , மேற்படி பதிவு செய்யப்படாத உயிலின்படி தான் தாவா சொத்துக்கள் எனக்கு கிடைத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான் . அந்த சொத்துக்களை தான் என் மகனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்ற சொல்லி தான் பி .சா.ஆ. 1, பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம் . மேற்படி பி.சா.ஆ.1, பி.சாஆ.2 ஆகிய இரு செட்டில்மெண்டுகளில் மூல பத்திரம் அந்த பதிவு செய்யப்படாத உயில் தான் என்று கூறுகிறேனா

என்றால் ஆமாம். பி.சா.ஆ.1, பி.சா.ஆ. 2, பி.சா.ஆ.3 முதல் பி.சா.ஆ.6 ஆவணங்கள் பத்திரங்களின் அடிப்படையில் தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாராயணசாமி மடம் சம்மந்தமாக என்னை இந்து சமய அறநிலைய துறையினர் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அந்த விசாரணை சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க , வாதி தரப்பு குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**முடிக்கப்பட்ட நேரம்: 12.36**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.